உ
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தெனை, எழுநா எச்சில்
மெச்சினா ளுளும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } அக்ஷய-௵ ஆவணி௴ 1926-௵ ஆகஸ்ட்௴ { பகுதி 8.

கருணைப் புகழ்ச்சி.

பாடுகின்ற பனுவ லோர்கள்
தேடுகின்ற செல்வமே!
நாடுகின்ற ஞானமன்றில்
ஆடுகின்ற அழகனே! (௧)
அத்தன் என்ற நின்னையே
பக்தி செய்து பனுவலால்
பித்தன் இன்று பேசவே
வைத்த தென்ன வாசமே! (௨)
சிந்தை அன்பு சேரவே
நைந்து நின்னை நாடினேன்
வந்து வந்துள் இன்பமே
தந்து இரங்கு தாணுவே! (௩)
அண்டாண்டம் யாவும்நீ
கொண்டுநின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரிகணீர்
கண்டநெஞ்சு கரையுமே. (௪)
அன்னை போல அருள் மிகுத்த
மன்னு ஞான வரதனே!
என்னையே எனக்களித்த
நின்னை நாளும் நினைவனே— தாயுமானவர். (௫)

மருவி வழங்கும் சில சொற்கள்.

(195-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காய்கறி நறுக்கும் கருவியை 'அருமாமணை' என்கிறார்கள். அது 'அரிவாள்மணை' என்றிருத்தல் வேண்டும். 'அரிகின்ற வாள் பதித்த பலகை' என்பது அதன் பொருள்.

'கச்சட்டி' என்பது 'கற்சட்டி' என்பதன் மரூஉ. 'கல்லால் ஆகிய சட்டி' என்பது அதன் பொருள். பெரும்பான்மை மாக் கல்லாலும், சிறு பான்மை கருங்கல்லாலும் செய்யப்பட்டதால், இப் பெயர் அதற்கு வந்தது என்பதை நம்மவர் அறியாதவரல்லர். ஆயினும், இதை நாளடைவில் கவனியாமல், 'கச்சட்டி' என்பது, குறித்த ஒருவித வடிவங்கொண்ட பாத்திரமென்றுமட்டும் கொண்டு விட்டனர். அவர்களுக்குக் 'கல்' என்ற பொருளைப்பற்றிய பிரக்ஞை இல்லாமலே போய்விட்டது. ஈயத்தாலாவது, பிற உலோகங்களி னாலாவது, எவ்வாறு 'கல்'சட்டி அமையும் எனச் சிந்தியாது, 'ஈயக்கச்சட்டி', 'பித்தளைக்கச்சட்டி' என்பன போன்ற தொடர் மொழிகளைக் கூசாது உபயோகிக்கலாயினர். இவைகளை 'ஈயச்சட்டி' 'பித்தளைச்சட்டி' என்னலே நேர்.

இங்ஙனம், தவறாகப் பொருள் மறந்து வழங்கப்பட்டுவருவது, 'கச்சட்டி' மட்டுமன்று. 'எண்ணை' என்று நம்மவர் வழங்கும் தொடர்மொழியைப்பற்றிய சில குறிப்புகளையும் கவனியுங்கள்: 'எண்ணை' என்பது தனித்தோ, பிறமொழிகளுடன் சேர்ந்தோ வரினும், அது 'எண்ணெய்' என்றிருத்தல் வேண்டும். இத்தொடர் மொழி 'எள் நெய்' அதாவது 'எள்ளிலிருந்து எடுபடும் நெய்' எனப் பொருள்படும். எள்ளினின்று எடுபடும் நெய்யே 'சுத்தமானது' உயர்ந்தது' என்பதை உணர்த்தவே, அதனை 'எண்ணெய்' என்னாது 'நல்லெண்ணெய்' என்கிறோம். 'நல்' என்ற சொல் சுத்தத்தையும் உயர்வையும் உணர்த்துவதை, 'நல் முத்து' 'நற்பவளம்' என்பன போன்றவற்றால் அறிக. 'எள் சம்பந்தப்பட்டது எண்ணெ'யாயி ருக்க, ஆமணக்கினின்று பிழிபடுவதற்கு 'ஆமணக்கு எண் ணெய்' என்றும், தேங்காயினின்று பிழிபடுவதற்குத் 'தேங்காய் எண்ணெய்' என்றும், இவைபோன்ற பிறவற்றிற்கு அவ்வவ் எண்ணெய்களென்றும், பெயர் வாய்ந்தது, பொருந்துமா? முந்திய

உதாரணத்தில் 'கல்' சம்பந்தம் தவறுனது என்பதை மறந்து, பல்வகை உலோகங்களினுலாகிய பொருளேயும் அவ்வக் 'கற்சட்டி' என்று கூறியதுபோல, 'எள்' சம்பந்தம் தவறுனது என்று எண்ணுமலும், 'எண்ணெய்' என்பது 'பிசுபிசுப்புள்ள ஒரு திரவ வஸ்து' என்றுமட்டும் கொண்டும், அவ்வாறிருக்கும் திரவ வஸ்து எதனையுமே 'எண்ணெய்' என்று கொண்டு விட்டனர். 'எள்' என்பதை நீக்கி அவற்றை 'ஆமணக்கு' நெய்' 'தேங்காய் நெய், என்னலே சரி.

'எண்ணெய்' என்பதை 'எண்ணே' என்று பிழைபட உபயோகிப்பது போல, 'வெண்ணெய்' என்பதை 'வெண்ணே' என்று அறியாத்தனத்தாற் கூறவும் எழுதவும் செய்கின்றனர். "வெண்மை நிற நெய்" என்று அதற்குப் பொருள்" என்பதறிந்திருப்பரேல், அதனே இவ்வாறு வழங்கியிரார். இதனேயும் கவனிக்க.

'எண்ணெய்' என்பதைப்பற்றிக் கூறிவரும்பொழுது, அந்தச் சொல்லுக்கும், அதன் நேரான வடசொல்லும் தமிழ்ப்பேசுவோரால் நாடோறும் உபயோகிக்கப்பட்டு வருவதுமான 'தைலம்' என்ற சொல்லுக்கும் உள்ள சில அதிசய ஒற்றுமைகள் நம் ஞாபகத்திற்கு வருகின்றன: 'தைலம்' என்பது "'திலம்' என்பதிலிருந்து பிழிந்தெடுக்கப்படுவது" என்று பொருள்படும். 'திலம்' என்பதற்கு 'எள்' என்பது பொருள். ஆகவே, 'தைலம்' என்பது 'நல்' எண்ணெயையே குறிப்பதாதல் வேண்டும். ஆயினும் வடமொழியில் நல்லெண்ணெய் என்பதைத் 'தில தைலம்' என்கிறுர்கள். இதனேக் கவனித்தால், வடமொழியாளரும் 'தைலம்' என்பதில் உள்ள 'திலம்' என்பதை மறந்து, "தைலம் என்பது பிசுபிசுப்பான ஒருவகை திரவப்பொருள்" எனக்கொண்ட உண்மை விளங்கும். 'தில தைலம்' என்ப தொன்றேயோ? தமிழில் 'தேங்காய் எண்ணெய்' 'ஆமணக்கு எண்ணெய்' என்று 'எள்'ளே சம்பந்தப்படுத்திக் கூறல்போல,வடமொழியில்,'தில'த்தைச் சம்பந்தப்படுத்திஅவற்றை முறையே 'ஏரண்ட தைலம்' 'நாளிகேர தைலம்' என்றே வழங்கி வருகின்றனர். 'நெய்' என்பதற்கு நேரிய வடமொழி 'ஸ்நேகம்' என்பது. ஆயினும் 'தைலம்' என்ற பதமே சாதாரணமாக உபயோகப்பட்டு வருகிறது. (இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

பராந்தகன்

எட்டாவது காட்சி.

இடம்:—சந்திர விலாஸத் தோட்டமும் அதிலுள்ள ஆலயமும்.

காலம்:—மாலை சுமார் 5-மணி.

பாத்திரங்கள்: - மங்கையர்க்கரசி, காஞ்சனை, நரைமுதுகிழவன் ஒருவன், ஸ்திரீ ஒருத்தி, ஏவலாளர், பிச்சைக்காரர் முதலியோர்.

[மங்கையர்க்கரசி தோட்டத்துள் நுழைந்து ஆங்காங்கிருந்த அநாதையர்க்கும் அங்கவீனர்க்கும் அவரவர்கட்கு வேண்டுவன அளித்துக்கொண்டு வருகிறாள்.]

கிழவன்:—(அலமந்தருகிருந்து ஈனமான குரலுடன்) உயிர்போகிறதே. இந்த ஏழைக்கு இரங்குவார் எவருமில்லையா?

மங்:-(திடுக்கிட்டு) காஞ்சனம்! யார் அது? போய், விஷயம் அறிந்துவா.

காஞ்:—(சென்று விரைந்து திரும்பி) அம்மணி! நாம் கேட்டது இறக்குந்தறுவாயிலுள்ள ஒரு தொண்டுகிழவனது தொனி. களைப்பு மேலிட்டுவிட்டதாலோ, கடும்பசிக் கொடுமையினாலோ, நான் சொல்லுமெதும் அவன் காதில் விழுந்ததாகத் தோன்றவில்லை. அவன் மனதில் ஏதோ இருக்கிறது. உபாதிமேலீட்டால் அதனை வெளியிடமுடியாது தவிக்கிறான். அம்மணியைக் காண விரும்புவதாய்மட்டும் அவன் காட்டும் சைகைகளால் தெரிகிறது. இங்கு வருமாறு அழைத்தேன். எழுந்தான் ஆவலுடன். விழுந்தான் தள்ளாடி. மீண்டும் அடி எடுத்துவைத்தான். மீண்டும் விழுந்தான். அவன் தேகம் புண்பட்டிருக்கிறது. ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாத நிலையில் இருக்கிறான்.

மங்:—அப்படியா? பாவம்! காஞ்சனம்!

"புண்பட்டார், போற்றுவா ரில்லாதார், போகுயிர்கள்
கண்கெட்டார் காலிரண்டும், இல்லாதார்"

எனது முக்கிய கவனத்திற்குரியவர்களாதலின், நான் அவனைப் பார்த்து, அவன் விரும்பியதறிந்து, கொடுத்துவருகிறேன். நீ இங்குள்ளோர்க்கு ஈவன ஈந்து, நான் இருக்குமிடம் வந்துசேர்.

காஞ்:—உத்தரவு அம்மணி!

[மங்கையர்க்கரசி கிழவனை நோக்கிச் செல்லு கிறாள். இதைக் கவனித்துக்கொண்டிருந்த]

கிழ:—தேவி! உன் சரணாரவிந்ததரிசனம் காணக் கொடுத்துவையாப் பாவியானேனே! ஐயோ! உயிர்போகிறதே!

மங்:—(விரைந்து சென்று) தாதா! உங்களுக்கு என்ன உடம்பு?

[கிழவன் கண்ணீர் ததும்பப் பேச நாவெழாமல் ஆலயத்தைச் சுட்டிக் காட்டி முக்கி முனகிக் கீழே விழுகிறான். காஞ்சனம் வருகிறாள்.]

ஐயோ! உங்களுக்குப் பேசவும் சக்தியில்லையே! நீங்கள் விரும்புவது இன்னதென்று உணரும் ஆற்றலும் எனக்கில்லையே!-தாதா!-தாதா!—பாவம்!. கடும்பசி இளைப்போ, நோய் உபாதியோ, தெரியவில்லை. காஞ்சனம்! ஒரு காரியம் செய்: நீ அதிவிரைவில் அரமனை சென்று, ஆவின்பாலுடனும் மருத்துவருடனும் வா. மருத்துவர் எங்கிருப்பினும் அழைத்துவா. செல் விரைவில்.

காஞ்:—அம்மணி! இதோ வந்தேன்.

[செல்லுகிறாள். அவள் மறைந்த இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் கிழவனுக்குச் சிறிது பிரக்ஞை வருகிறது.]

கிழ:—(கண்ணைமூடிய வண்ணமாய் வானத்தைநோக்கிக்கும்பிட்டு) ஈசுவரி! வந்தேன் இதோ!. ஐயோ! கண் பஞ்சடைகிறதே. [அழுகிறான்.]

மங்:—தாதா! அழாதேயுங்கள். உங்களுக்கு என்ன உபாதி? என்ன தேவை? சிறிது பால் வரவழைக்கட்டுமா? உங்களுக்கு உற்றார் உறவினர் யாரேனும் சமீபத்துளரா? நீங்கள் எந்த ஊர்? எங்கு வந்தீர்கள்? பார்த்தால் பிச்சைக்காரராய்த் தோற்றவில்லையே!

கிழ:-(அரைக்கண்விழித்து வெகுசிரமப்பட்டு) குழந்தாய்! என்பொருட்டு நீ வருந்துவதில்-பயனில்லை. இந்த நிலையில்-எனக்கு நீ-அன்புடன் அளிக்க விரும்பும்-உணவெதும்-பயன்படாது.—எனக்கு-உற்றார்-இருவரே உளர். சாகிற காலத்திலேயாவது—'சங்கரா! சங்கரா!' என்று சொல்லவேண்டுமல்லவா?-யாத்திரை செய்யப்-புறப்பட்டேன். சங்கடமில்லாமல்—தேவி—ஐக்கியத்துக்கு அழைத்துக் கொள்ளவேண்டும்.

மங்:—(கண்ணீர்விட்டு) 'உறவினர் இருவர்' என்றீர்களே, அவர்கள் யாவர் தாதா?

கிழ:—கண்ணே! அவர்களா? என் தாய் தந்தையரே. 'சாகப்போகிற கிழவன்-சித்தஸ்வாதீனமில்லாமல்-உளறுகிறான்' என்றெண்ணி விடாதே.—மாதா: கௌரி-பிதா: சம்பு.

மங்:—நான் இப்பொழுது செய்யக்கூடியது ஏதுமே இல்லையா?

[கிழவன் சோர்ந்து விழுகிறான். சிறிது நேரத்திற் சோர்வு தீர்ந்து, ஆலயத்தைச் சுட்டிக் காட்டுகிறான்]

தாதா! உங்கள் கருத்து விளங்கவில்லையே! என்ன வேண்டும்?

கிழ:—(வெகு சிரமப்பட்டு இருமலுக்குமேல் இருமல்வர) குழந்தாய்! என் உயிர் பிரியப்போகிறது. உனக்கு உண்மையில் இக் கிழ ஜீவன் மீது கருணையிருப்பின், நீ செய்யக்கூடிய காரியம் ஒன்று உளது.

மங்:—அது என்ன தாதா? செய்யக்கூடியதாயின், அவசியம் செய்தே மறு காரியம் பார்க்கிறேன்.

கிழ:—தேவியின் திருவடியிலேயே என் சிந்தை செல்லுகிறது இப்பொழுது. சிறிது பிரக்ஞை இருக்கும்போதே, சர்வ வரப்பிரசாதியாகிய அம்பிகையைத் தரிசனம் செய்து வைத்தால் உனக்கு எவ்வளவோ புண்ணியமுண்டு.

மங்:—இது ஒரு பிரமாத காரியமில்லை தாதா. இவ்வளவு தானே? அதிகமாகப் பேசித், தொண்டை வறளவும், தேகத்தில் உபாதி அதிகரிக்கவும் செய்து கொள்ளாதேயுங்கள். உங்களுக்காவன செய்யவே என் உயிர்த்தோழியை அரமனைக்கு அனுப்பியுளேன். அவள் வந்ததும் நீங்கள் விரும்பிய இடம் செல்வோம்.

கிழ:—(பெருமூச்சுவாங்க) ஏதம்மா! என் எண்ணமும் உன் விருப்பும் நிறைவேறும் பாக்கியம் எனக்குச் சித்தியாது போலிருக்கிறது: என்னசெய்வேன்! உன் தோழி வரும்வரை என்பிராணன் நிற்பது சந்தேகம். அது அரைநாழிகையில் அடங்கிவிடுமென்றே தோன்றுகிறது. நீ 'கௌரவக்குறைவு' என்று எண்ணாவிடில், இக் கிழவனை நீயே இட்டுச்சென்று தேவியின் திருமுன் நிறுத்தினால்—

[மேலே பேசமுடியாதபடி விம்மியழுகிறான்]

மங்:—(மனங்கரைந்து) தாதா! அழாதேயுங்கள். உங்கள் நிலைமை இவ்வளவுதூரம் சீர்கேட்டிருக்கும் என நான் எண்ணவில்லை. உங்களை அழைத்துச்செல்வது அகௌரவமெனக் கருதி நான் என் தோழியை எதிர்பார்த்து நிற்கவில்லை. அன்பர்பணி செய்யும்பேறு எனக்கு எதிர்பாராது இன்று கிடைத்துளமைக்கு மகிழ்கின்

றேன். அவள் வருகைக்காக நாம் காக்கவேண்டியதில்லை. புறப் படுங்கள். (ஏவலாட்களை நோக்கி) நம் வருகையை அறிவித்து ஆலயத் துள்ள யாவரையும் நாம் தரிசனம் செய்து திரும்பும்வரை அப் புறத்திருத்துங்கள். காஞ்சனத்தையும் மலர், மாலை முதலியன யுள்ள தட்டேந்திவரும் ஸ்திரீயையுந் தவிர, எவரையும், நாம் மறு உத்தரவிடும்வரை உள்ளே விடாதேயுங்கள். நமது உத்தரவை எதிர்பார்த்து ஆலயத்துக்கு வெளியே நில்லுங்கள்.

[ஏவலாட்கள் சென்று திரும்பி, கட்டளை நிறைவேறிய விஷயம் தெரிவிக்கிறார்கள். கிழவன் தள்ளாடித் தள்ளாடிவர, அவனை ராஜகுமாரி மெள்ளக் கோல்பிடித்து அழைத்துச்சென்று, அம்பிகையின் சந்நி தானத்திற்கொண்டுபோய் விடுகிறாள்]

கிழ:—(ஆனந்தக் கண்ணீர் சொரிந்து) குழந்தாய்! தேவி ஜகன்மாதா வின் பரிபூரணகிருபை உனக்குண்டாகுக.

மங்:—தாதா! அருள் நிரம்பிய உங்கள் ஆசீர்வாதம் பொய்க்காது. இனி என்னைப் பற்றிய சிந்தனையை ஒழித்துத் தேவியைத் தியா னித்து, விரும்புவன அருளுமாறு வேண்டுங்கள்.

கிழ:—நல்லது கண்ணே! [சிறிதுநேரம் தியானத்திலிருந்து பாடுகிறான்]

" நாவென்று கேட்பதுன் சாயுச்சிய பதமன்று;
சாரூப மன்று; மற்றச்
சாமீப மன்(று); உனது சாலோகமன்று; நின்
சரணார விந்தமன்று;
பூவன்று வெள்ளிப் பொருப்பன்று; பொன்னுலகம்
அன்று; பொன் மலையுமன்று;
புவலோக தவலோக சத்தியலோ கமுமன்று;
பூவலக கமன்று; தெய்வப்
பாவன்று நாவன்று; கண் அன்று; காதன்று;
பண மன்று; காசன்று காண்;
பக்தஜன மென் றெனைப்பணிகின்ற பேருடைய
பாதது ளிக்குள் துளி
வாவென் றழைத்தென்று தருவையோ வென்றுதினம்
மனமென்றும் உருக வசமோ?
மதுரித்த மொழியிட்டு மதுரத்தை விலைபிட்ட
மதுரைக் கயற் கண்ணியே,

மங்:—(வியப்பும் திகைப்பும் மேலிட்டு) ஆ! ஆ! இதுவென்ன!

“ நரையொளி பிறங்கி உடம்பெலாம் திரைந்து
நரம்புகள் தெரிந்திட வறந்து
தெரிதரும் கட்பா வையின்ஒளி மழுங்கித்
திரள்படப் பீளையும் சாடித்
தரிபடா நாசித் துளையில் நீர்ததும்பத்
தைத்தறக் கிழிந்ததோர் துணியும்
அரையிடைக் கிடந்து சரிந்தடிக் கடிவீழ்ந்(து)
அவிழ்ந்திட ஒருகரம் தாங்க
உடற்குறை கூனும் செவித்துளை அடைப்பும்
ஒருகையில் தடிக்குளா தரவில்
நடக்கையில் நடுக்கும் தலைக்கிடு கிடுப்பும்
நனிதர அசைந்துதள் ளாடி
ஒடுக்குறக்கிடந்த பல்லறப் பெயர்ந்த
உதட்டினில் வாயினீர் ஒழுக்கி
அடிக்கடி இளைப்பிற் குலுக்கிய களைப்பால்
அறத்தவித் தெழுந்தகோ லமுமே”

கொண்டு, கண்டார் நகைக்கத் திண்டாடிய இத்தொண்டு கிழவன், இப்பொழுது காளைப்பருவம் வாய்ந்தவன்போல வெகுகம்பீரமாயும், உருக்கும் கல்லும் உருகவும், பாடுவது, தேவியின் அருட்டிறப் பயனாயிருத்தல் கூடுமா? யாரை, எப்படி, நம்புகிறது? இவ்வுலகில் கபடம் நிறைந்தவர்க்குத் துறவி வேஷமும், வைராக்கிய மொழிகளும், சாதுரியத்திருடனுக்குக் கன்னக்கோல்போல் உதவுவதை நன்கறிந்திருந்தும், முன்யோசனை சிறிதுமின்றி, மெய்காப்பாளர் தோழிமார்கள்முதலியோருடன் வழக்கம்போல் வராதுவந்துவிட்ட என் பேதைமதியை என்னென்பேன்! எந்தைக்கு விரோதிகள் எத்தனைபேர்களோ உண்டே! அவர்களில் ஒருவனாகவாவது, அவர்களால் ஏவப்பட்டவனாகவாவது, இருப்பனோ இவன்? [பாடுகிறான்.]

‘கோதாய்ந்த மாமுனிவர் தேடித்தேடிக்
கூவியும்கா ணாப் பொருளே! குணத்தின் வெற்பே!
வேதாந்த வேலைவிளை முத்தே! நின்பால்
மேவிஅறி வோர்அகல, மற்றோர்க் கெல்லாம்
சூதே! சூ தகன்றதருப் பணமே! ஓயாச்
சுக லகரியே! துலக்கா ணந்தரூப
மாதேபோல் அமைந்திலகும் உமையே! உன்றன்
மலரடியைத் துணைக்கொண்டார் வருந்த லுண்டோ?

(வெளிப்படையாய்) தாதா! ஏது இவ்வளவு கம்பீர தொனி உங்களுக்குத் திடீரென வந்துவிட்டது?

கிழ:—அதிவிருத்தனுன நான் இப்பொழுது கௌமாரம் அடைந்துவிட்டேன் அம்மா! உள்ளபடியே உடல் வலியும் மனவலியும் படைத்திருக்கின்றேன் இப்பொழுது. மங்காய்! இது மதுரையின் மகத்துவம். திடீரென மாறிய எனது இந்நிலைமை, சாக்ஷாத் சோமசுந்தரக் கடவுளின் அருள் விளையாடல் ஒன்றை நினைப்பூட்டுகிறது: அவ்விறைவன் விருத்தராய் வந்து, குமாரராகி, பின் பாலரும் ஆனுர் என்பதை அறிவாயே. ஆனல் நான் அவர் ஆவேனு? ஆதலால் குமாரனுக, உண்மையில், உன் முன்பே ஒரு வேளை மாறினும் மாறுவேன். பாலனுகும் சக்தி மட்டும் எனக்கு வந்திலது. வரவும் வராது. என்ன அம்மா யோசிக்கிருய்?

மங்:—(தனக்குள்) இவன் பெருவஞ்சகன். இப்பொழுது அதிகம் இவனுடன் உரையாட ஒண்ணுது. (வெளிப்படையாய்) நீங்கள் கூறியது சரியே. நல்லது—அம்பிகையினருளால், நல்ல வேளையாய் முன்னினும் உடல்வலியும் மனவலியும் பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன். தேவியை நான் ஆராதிக்கும் நேரம் வந்துவிட்டது. மெள்ளமெள்ள வாருங்கள்; வெளியே கொண்டுவிடுகிறேன்.

கிழ:—(சிரித்து) மங்காய்! எனது பலநாளைத் தவம் அநேகமாய்ப் பலித்துவிட்டது. நான் இங்கிருந்தே இன்னொரு காரியம் செய்து தீர வேண்டியிருக்கிறது. இருக்கட்டும். உன் பெயர் 'மங்கையர்க்கரசி' யல்லவா? நீ அரசன் வளர்க்கும் அருமைத் திருமகள் தானே?

மங்:—(திடுக்கிட்டு) ஆம் ஐய! எதற்காக இந்தக் கேள்விகள்?

கிழ:—எதற்காகவா? ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! உன்னுடன் பேச எனக்குச் சாவகாசமில்லை. அரை நொடியில் உன் உயிர் போகப் போகிறது.

[மங்கையர்க்கரசி தலயிடப் பார்த்தும் காடை யூாமல் நடுங்கி நிற்கிறுள்].

ஓடித்தப்பும் எண்ணத்தை ஒழித்தே விடு. உரவில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்பாது. உயிரில் உனக்கு உண்மையில் ஆசையிருந்தால் சொல்லுகிறபடி செய். உனக்கு வந்துள்ளது ஒரு பிரமாத விபத்து. நீ பிழைத்தால் மறுபிறப்பேயாம். இது சத்தியம். ஆதலின் என் வார்த்தையை நம்பு. உன்னைப்பற்றிய

கவலை உனக்கு இனி வேண்டாம். உன் இஷ்ட தேவதையைத் தியானித்த வண்ணமாய் இரு.—இனிக் காலந்தாழ்க்காது என் கருமத்தை முடித்துத் தீரவேண்டும். கொலையையும் கொலைஞனையும் நீ நேரில் காண். என்ன செய்யப்போகிறேன் பார்.

[இடுப்பில் மறைத்து வைத்திருந்த திருகு தடியை வெளியே எடுத்து அதிலடங்கிய உள்ளாயுதங்களை வெளியிழுத்து, ஈட்டியை ஒருமுறை நோக்கி, மங்கயர்க்கரசிக்குக் காட்டி, அவள் வாயில் துணி அடைத்து].

சரி!. படு கீழே. திறவாதே வாயை. மூச்சு விடாதே. பிணம் போற் கிட. நான் சொல்வதில் எதுவும் இம்மியேனும் செய்யத் தவறினால் உன் உயிர் உன்னது அன்றாகும். ஜாக்கிரதை.

[மங்கயர்க்கரசி நடுநடுங்கிய வண்ணமாய்ப் படுத்து இறுகக் கண்மூடிக்கொள்ள, கிழவன் சீட்டி அடிக்கிறான். அவன் ஊதிய இரண்டொரு நிமிஷங்களில், வஸ்திரத்தால் மூடிய மலர்மாலைத்தட்டு ஏந்தி, ஒரு ஸ்திரீ, விரைந்து நுழைகிறாள்]

ஸ்திரீ:—எந்த மட்டிலே இருக்கு? முடிஞ்சிச்சா காரியம்? இல்லாட்டி எக்கச் சக்கமா அகப்பட்டுக்கிட்டு முளிக்கிறியா? ராசாமக எங்கே? தப்பிச்சுக்கிட்டு ஓடிடிச்சா? சொல்லியளு சீக்கிரம்.

கிழ:—என்ன இப்படிக் கேக்கறீங்க? ஓங்ககாரியம் முடியாமப் போகப்போறதின்டா எண்ணுறீக? அந்தச் சமுசயமே மாணும். வாங்க வாங்க. அதோபாருங்க இந்தச் செவுத்தோரத்திலே.

[ஸ்திரீ, ஆவலுடன் சுவர் நோக்கிச்செல்ல அவளை எதிர்கொண்டழைத்துச்செல்லவந்த கிழவன், மின்னலினும் தீவிரமாய் அவள் மார்பில் ஈட்டியைப் பாய்ச்சித் தக்கையை அழுத்த, விஷம் தலைக்கேறி ஒருவித பயங்கர விகார ஒலியுடன் விழுந்திறக்கிறாள். இவ்வொலி எவர் செவியிலும் விழாதிருக்குமாறு, கிழவன் பூஜைமணியை ஓயாதடிக்கிறான். ஸ்திரீயின் உயிர் பிரிந்ததும், கிழவன் மங்கையர்க்கரசியை எழச்செய்து]

அம்மணி! பயப்படாதே. உன் உயிருக்கு இனி ஹானி இல்லை. நான் கள்வனல்லன்: கொலைகாரனுமல்லன். ஆயின், அவர்களிலும் கேடுகெட்டவன். கொள்ளைகாரக் கொலைகாரரின் வேலையாள். வயிற்றுச் சோற்றுக்கு வழியின்றி அவர்களிடம்

வேலைக்கமர்ந்து அவர்களிடம் கட்டளையை நிறைவேற்ற ஒப்புக்கொண்டவன். அவ்வளவே. நான் உன்னை எச்சரித்த போதெல்லாம், நானே உன்னைக் கொல்லத் தீர்மானித்தவ னென்றே எண்ணி அஞ்சிக் கிடந்தனையன்றோ? கொல்வேனோ உன்னை? உன்னை ஒரு காரணம்பற்றிக் கொல்லுமாறு என்னை அமர்த்தியும், அத்துடனும் திருப்தியுறாமல், நான் அவ்வாறு செய்கிறேனோ இல்லையோ என்ற அவநம்பிக்கையால், நேரிலிருந்து காணவும், என்னால் முடியாவிடின், தன் கையாலேயே உன்னைக் கொன்றுதீர்க்கவும் வந்த பாதகன், இதோ ரத்தம் கக்கிச் செத்துக்கிடக்கிறான் பார்.

[மங்கையர்க்கரசியைக் குத்துண்டிறந்து கிடந்த ஸ்திரீயிருந்த இடம் அழைத்துச் சென்று, அவன் மேலாடையையும் மூக மூடியாதியவற்றையும் களைந்து, 'வந்த ஆள், ஸ்திரீயே இல்லை' என்பதையும், வேஷமாறி வந்த ஓர் கொடிய கொலைஞன் என்பதையும் காட்டி, அவன், மலர்மாலைத் தட்டிலும், தரித்திருந்த ஆடைகளுக்குள்ளும், மறைத்து வைத்திருந்த பல பயங்கர ஆயுதங்களையும் ஒவ்வொன்றாகக் காட்டி, அடைத்த வாய்த் துணியை எடுத்து விடுகிறான்.]

மங்:—(நடுநடுங்கி மூர்ச்சித்து விழுந்து பின்னர்த் தெளிந்து) ஐய! உண்மையிலேயே நீங்கள் கூறியதை அச்ச மிகுதியால் உய்த்துணரச் சக்தியற்றவளாயிருந்தேன். என்னுடைய ஆவியையும் மானத்தையும் காத்து, எங்கள் குலப்பெருமையையும் நிலைநிறுத்திய தங்களுக்கு, நான் செய்பவல்ல கைம்மாறும் உளதோ! தாங்கள் எங்கிருப்பீர்கள்! எந்தையிடம் தங்கள் அருஞ்செயலைக் கூறித் தக்க சம்மானம் வாங்கித் தருகிறேன்.

கிழ:—பெண்ணரசி! உன் அமுதவாக்கின் இனிமை ஒன்றே போதும். பரிசுபெறக் காலம் இஃதன்று. உன் சிறியதந்தையும் எளிதில் நான் வேண்டுவன தாரார். அவர்க்கு வயோதிகத்தால் அறிவு கலங்கிவிட்டது. நான் அவர்க்கு ஆகாதவனாகுமாறு படுபாவிகள் செய்துவிட்டார்கள். இப்போதைக்குச் சும்மாபோகவும் எனக்கு மனம் வரவில்லை. ஒருகாரியம் செய்வாயா?

[மங்கையர்க்கரசியின் கன்னத்தில் அழுந்த முத்தமிடுகிறான்.]

மங்—பாதக காதக! என்னவோ நினைத்தேனே! நீ ராவணசந்யாசி என்றும் 'அர்ஜுனசந்யாசி' என்றும் தெரியாமற் போனேனே!

கிழ:—(அதிவிரைவில் தன் மேல்உடையைக் கழற்றி முகமூடியை எடுத்து அதி பயங்கர ஒற்றைக் கண்ணனாய் நின்று) போதும். மூடு வாயை. இல்லையேல்— [மங்கையர்க்கரசி பதைபதைத்து வாய் புதைத்து நிற்கிறாள்]

ராஜகுமாரி! 'விருத்தன், நீ காணக் குமரனாதலும் கூடும்' என்றேனல்லவா? அது பலித்தமை கண்டாயன்றோ? என்னைப் 'பாதக காதகன்' என்றாய். 'பித்தன்' என்று, சுந்தரமூர்த்தியின் வாக்கில் வந்தவுடன், சிவபெருமானுற்ற பேருவகையே,'பாதககாதகன்' என்று நின் அமுதத் திருவாக்கினின்று வந்ததும், யானுற்ற உவகை. இனி என் பெயர் அதுவே யாகுக. உண்மையில் யான் அவனே. இருக்கட்டும். ஏனோ என் மீது இவ்வளவு கோபம்? நான் குணக்கேடனும் அழகிலானுமாகத் தோற்றுவதால் போலும். இருக்கலாம். ஆனால் நீ எனக்குச் சுகுணசுந்தரியாகவே இருக்கிறாய். குறைவுக்கு நிறைவு தேடுவது குற்றமாமா? பல சொல்லியென்? உன் மனம் நோவ ஏதும் இனிச் செய்யேன். நான் செய்து முடிக்கவேண்டிய பிறகாரியங்களை முடித்த பின்னரே எனக்குரிய பரிசு உன்னிடமிருந்தோ, என்னை அறிவினத்தாற் பகைக்கும் உன் சிறிய தந்தையாரிடமிருந்தோ வலிதிற் பெறுவேன். நல்லது வருகிறேன். அரை நாழிகை இரு இங்கேயே. கொலைஞனைச்சேர்ந்த பிற கூட்டாளிகள் வேஷம் மாறி ஆங்காங்கு மறைந்திருக்கின்றனர். நான் வெளிச்சென்று இக்குழலை ஊதி, அவர்களை ஒருங்குசேர்த்து அழைத்துச்சென்று விடுகிறேன். ஊதொலி சத்தம் கேட்ட சின்னாழிகைக்கெல்லாம் நீ தைரியமாய் வெளிக்கிளம்பலாம். கிளம்பி வெளியேறியதும், அறிவுகலங்கியுள்ள உன் சிறிய தந்தையாரைக் கண்டு, தேவிக்கு நரபலி நிகழ்ந்த விஷயத்தையும், அவரது ஆருயிரினும் சிறந்த நின்னைக் காத்தளித்தது அவரது பகைவர் இனத்தைச் சார்ந்துள்ள "பாதக காதகன்" என்பதையும் தெரிவி.

[விருத்தகுமாரன் கோவிலில் ஓர்மறைவிடம் சென்று உருமாறி, தட்டேந்திய பெண் உடைதரித்து வெளிப்பட்டு மறைகிறான்.]

(காட்சி முடிகிறது.)

திருக்குடந்தை: ஆபக்கண்ணனார்

பெஞ்சமின் பிராங்க்லின்.

Benjamin Franklin.

அத்தியாயம் 9.

பெஞ்சமின் வகித்த உத்தியோகங்கள்.

"இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்—திருவள்ளுவர்.

1736-ஆம் பெஞ்சமின் சட்ட மகாசபை உத்தியோகஸ்தராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவ்வேலை பார்த்துவந்ததால், துரைத்தனத்தார் வழங்கும் செலாவணி நோட்டு, சட்டங்கள், முதலியன இவருடைய அச்சுக்கூடத்திலேயே அச்சடிக்கப்பட்டன. ஆதலால் அவருக்கு இதனாலும் மிக்க பொருள் வருவாய் கிடைத்தன. மறு வருடமும் இவரையே அந்த ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுத்தார்கள்.

பின், பிலடல்பியாவிலிருந்த தபாலாபீச உத்தியோகஸ்தர் தம் கணக்கைச் சரிவர வைத்துக்கொள்ளாததாலும், வந்த பணத்தை உரியகாலத்தில் செலுத்தத் தவறியதாலும் வேலையினின்றும் நீக்கப்பட்டார். பெஞ்சமினுக்கே இவ்வேலை கிடைத்தது. அந்த வேலையை அவர் மிக்க ஒழுங்காகப் பார்த்து நல்லபேர் எடுத்தார்.

பின்பு இவர் சட்டமகா சபைக்கு அங்கத்தினராக ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கு அவர் பல்வேறு விதங்களில் ஜன சௌகரியத்திற்காகப் பாடுபட்டார்.

கடைசியில் இவருக்குத் தபால் இலாகாத் தலைவராகும் பதவி கிடைத்தது. அப்பதவியிலும், பொது ஜனங்களுக்கும் அரசியலார்க்கும் செய்த உதவிகள் அநேகம். தம் அதிகாரத்திற்குட்பட்ட ஒவ்வொரு தபாலாபீசையும், அவர், தாமே நேரிற்சென்று பார்வையிட்டார். முன்பு விதிக்கப்பட்டிருந்த தபாற் கட்டணம் அதிகமாயிருந்தது. இவர் சகாயமான தபாற்கூலியில் காகிதங்களையும், பத்திரிகைகளையும், அனுப்பிவர ஏற்பாடு செய்தார். இதுநிற்க.

பிலடல்பியா, என்பது பென்ஸில்வேனியா (Pennsylvania) என்னும் மாகாணத்தின் தலைநகர். அம்மாகாணத்திற்கு அப்பெயர் வரக்காரணம் வருமாறு:-இங்கிலாந்தின் மன்னரான இரண்டாம் சார்லஸ் (Charles II) என்னும் அரசர், பென் (Penn) என்பவருக்கு

வட அமெரிக்காவில் 40,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ள ஒரு மாகாணத்தைச் சர்வசுதந்தர பாத்தியத்துடன் அனுபவித்து வருமாறு கொடுத்தார். அதுபேன் என்பவரதாய் விட்டதால் அதற்குப், 'பேன்ஸில் வேனியா' என்ற பெயர் வாய்த்தது. சில நிபந்தனைக்குட்பட்டே இம்மாகாணம் பென் என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. அவை, "அம்மாகாணத்தில் கிடைக்கும் பொன், வெள்ளி உலோகங்களில் ஐந்திலொருபாகம் இங்கிலாந்தில் மன்னர்பிரானுக்குக் கொடுபட வேண்டும். அம்மாகாணம் இங்கிலாந்தின் சட்டத்தை ஒட்டியே பரிபாலிக்கப் படல்வேண்டும். அம் மாகாணத்திலுள்ள ஜனப்பிரதிநிதிகளமைந்த சபையின் உத்திரவின்றி வரிவிதிக்கவாவது சட்டதிட்டம் செய்யவாவது கூடாது" என்பவைகளே.

பென் என்பவருக்குப்பின் அவருடைய இரண்டு குமாரர்களும் அவ்விஸ்தீரணமான பாகத்திற்கு உரியராயினர். அங்ஙிலம், மன்னர் பிரானல் சர்வசுதந்திர பாத்தியத்துடன் அனுபவித்து வருமாறு வழங்கப்பட்டதால், அது சம்பந்தமாக வரி செலுத்தாமல் இருந்து வந்தார்கள். இது நிற்க;

அமெரிக்காவில் ஐரோப்பாக்கண்டத்திலிருந்து குடியேறிய ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும், தம்முள் மாறுபட்டு, ஒருவரையொருவர் நாட்டைவிட் டோட்டிவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் சண்டையிடலாயினர். இதனல் ஆங்கிலேயர் அடைந்த பொருள் நஷ்டம் அதிகம்.

இந்த யுத்தச் செலவிற்காகவும், தங்கள் மாகாணப் பாது காப்பினிமித்தமும் பென்ஸில்வேனியாச் சட்டமகா சபையார் 2,18,000 பவுன்கள் கடனகப் பெற்றிருந்தார்கள். இக்கடனைத் தீர்ப்பதற்கு நிலவரி போட்ட காலத்தில், தங்கள் விஸ்தீரணமான பூமிக்காக யாதொரு காசும் வரியாகச் செலுத்தமுடியாதென்று அதற்குரிய இருவரும் கண்டிப்பாய்த் தெரிவித்து விட்டார்கள். சட்டமகா சபை அங்கத்தினர், எவ்வளவோ மன்றாடியும், அது செவிடன்காதில் சங்கு ஊதியது போலாயிற்று. அவர்கள் வெகு அலட்சியமாக இருக்கவே, 'எந்த நிலங்களின் மீதும் வரிவிதிக்கும் அதிகாரம் சட்டமகாசபைக்கு உண்டு' என்ற உத்திரவைப்பெற்று வரத் தங்கள் பிரதிநிதியாக அச்சபையார் பெஞ்சமினையே, இங்கிலாந்துக்கு, மன்னர்பிரானிடம் அனுப்பத் தீர்மானித்தனர். அதற்குடன்பட்டுச் சென்ற பெஞ்சமின்,

மார்க்கத்தில் அநேக கஷ்டங்களை அனுபவித்துக் கடைசியில் இங்கிலாந்து வந்து சேர்ந்தார். சேர்ந்ததும், தாம் முதல்முதல் இங்கிலாந்துக்கு வந்தபோது உழைத்த அச்சுக்கூடத்தைப் போய்ப்பார்த்தார்.

இங்கிலாந்தில் அவருக்கு அதிக மரியாதை நடந்தது. 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்' பன்றோ! ரசாயன சாஸ்திரத்தில் நிபுணர் என்ற நிலைமையில் இங்கிலாந்திலுள்ள சர்வகலாசாலைச் சங்கங்கள், அவருக்குக் கௌரவப் பட்டங்கள் பல அளித்தன. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்றவாறு அவரைச் சதாகாலமும் கற்றார் பலர் சூழ்ந்திருந்தனர். எவரும் தம்மைப்புகழும் போதெல்லாம் அவர் 'புகழப் பணியுமாம் பெருமை' என்பதற்கும், 'கற்றறிவார் கண்டது அடக்கம்' என்பதற்கும் இலக்காகி நின்றார்.

ஆறு வருடகாலம் அவர் இங்கிலாந்தில் இருக்கவேண்டி வந்தது. வீடுவாசலை விட்டு எவ்வளவு நாட்கள்தான் வேற்றாரில் வசிப்பது? ஊரை நினைந்து சிற்சில சமயம் வருந்துவார். ஆயினும் வந்தகாரியம் முற்றுப்பெறாமல் ஊர் போவதெங்ஙனம்? அரசரின் ஆலோசனைசபை அங்கத்தினர்களுக்குத் தாம் வந்த காரியத்தின் நோக்கத்தை அதிசிரமப்பட்டு நன்கு எடுத்துரைத்து, முடிவில் காரியசித்தி பெற்றே திரும்பினர்.

பிலடல்பியா வந்ததும், இவரது செயற்கரிய செயல்களை வியந்த சட்டமகாசபையார் இவரது சிரமத்தை மதித்து இவருககு 15,000 டாலர்களை மனமொப்பி வெகுமதியாகத் தந்தார்கள்.

எழுதுவதற்கும் அச்சிடுவதற்கும் வேண்டிய எல்லாவிதமான காகிதம்; மை, பேனு, பென்சில் முதலியன

திருச்சிக்கோட்டை

ஜனனுகூல அச்சுக்கூடத்தில்

விலை சரசமாய்க் கிடைக்கும்.
விலை விவரத்தை விசாரித்தறியுங்கள்.

அத்தியாயம் 10.

மீண்டும் இங்கிலாந்து செல்லல்.

*அன்(பு) அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி அமையாத மூன்று—திருவள்ளுவர்.*

முன் அத்தியாயத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் நடந்த இரண்டு வருடங்களுக்கெல்லாம், பெஞ்சமின் மறுபடியும் ஜனங்களின் பிரதிநிதியாக இங்கிலாந்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. இதற்குக் காரணம் வருமாறு:—

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும், வியாபார நிமித்தமாகவும், குடியேறி வசிப்பதற் கென்றும், இந்தியாவிலும், வட அமெரிக்காவிலும், போய்த் தங்கினார்கள். இவர்களுக்குள் பொறாமை உண்டாக, ஒருவரை யொருவர் ஊரை விட்டே ஓட்டி விடத் தொடுத்த போர் அநேகம். சண்டையென்றால் சாதாரணமானதா? எவ்வளவோ கோடிக்கணக்கான பணம் செலவழியுமன்றோ? ஜன க்ஷேமத்தின் பொருட்டே போர் நடத்தும் துரைத்தனத்தார் அதற்கு அவசியமான பணத்தைக் கடனாகப் பெறுவர். பின் ஜனங்களின் வரியைச் சற்றுக் கூட்டி, வசூலித்த அதிகப்பணத்தைக் கொண்டு, கடனை அடைப்பது வழக்கம்.

முன் சொன்ன சண்டைகளில இங்கிலாந்தே வெற்றி பெற்றது. அதற்குக் கடனும் அதிகரித்தது. ஆதலால் ஆங்கில அரசாங்கத்தார் வட அமெரிக்காவிலிருந்த தம் குடிகள் விஷயமாய், யுத்தத்திலநேர்ந்த செலவுக்காக, அவர்களும் வரி செலுத்தக் கடமைப் பட்டவர்களே எனக் கொண்டு அவர்களிடமிருந்தும் வரி பெறத் தீர்மானித்தனர்.

தாய் நாடாகிய இங்கிலாந்திலுள்ள 'பாராளுமன்ற' (Parliament) த்தில் தங்களுடைய பிரதிநிதிகள் யாருமே இல்லாததால் அவர்களுக்குத் தங்களிடமிருந்து வரி வசூலிக்க அதிகாரமில்லையென்று அமெரிக்காவிலுள்ள ஆங்கிலேயர்கள் அபிப்பிராயப்பட்டனர். இந்த அபிப்பிராயத்தை இங்கிலாந்தில் தெளிவாகத், தெரிவிக்கும்படி அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் ஒரு பிரதிநிதி அனுப்பப்பட்டார். பிலடல்பியாவைத் தலை நகராகக்கொண்ட பென்ஸில்வேனியாவிற்குப் பிரதிநிதியாகப் பிராங்க்லினே நியமிக்கப் பெற்றார். அவரும் இவ்வேலையை ஒப்புக்கொள்ள, சகல மரியாதைகளுடனும் அவர் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார்.

அங்கு இவருடைய நண்பர் பலர் இவரை நன்கு வரவேற்று உபசரித்தனர். அவர்கள் அமெரிக்காவிலுள்ளோர் சொல்வது நியாயமானதே எனவும் தேர்ந்தனர். பெஞ்சமினும் இங்கிலாந்தில் இத்தடவை பத்து வருடம் இருந்து, அமெரிக்காவிலுள்ளோர் அபிப்பிராயத்தைப் பல இடங்களிலும் பிரசங்க வாயிலாகவும் பரப்பினார்.

என்ன செய்து மென்ன? இங்கிலாந்தை அச்சமயம் அரசாண்ட மூன்றும் ஜியார்ஜ் அரசரும், அவருடைய மந்திரிகளும் ஓரே பிடிவாதமாக 'அமெரிக்கா இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளில் ஒன்றே' என்றும், 'அதனால் வரிவிதிக்கவோ அல்லது சட்டம் நிர்மாணிக்கவோ தங்களுக்குச் சர்வ அதிகாரமும் உண்டு' என்றும் சொன்னதுடன், அதைச் செய்கையிற்காட்ட, ஒரு வரியும் விதித்தனர். இக் கட்டளையை நிறைவேற்ற இங்கிலாந்திலிருந்து, ஒரு சேனையும் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டது. பெஞ்சமின் எவ்வளவோ பாடுபட்டும், அவர்களின் மன நிலைமையை மாற்ற முடியாமற் போய்விட்டது.

1775-ல் பெஞ்சமின் தாம் வந்த காரியத்தில் சித்தி பெறாமல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குத் திரும்புங்காலை, அவர் நண்பர் பலர்கூடி அவருக்கு ஒரு விருந்தளித்தனர். அவர்கள் எல்லோரும், அமெரிக்கா தேசத்துள்ளவர்கள் சொல்வது ஞாயமே என்னும் கொள்கை யுடையவர்கள். விருந்து நடந்து கொண்டிருக்கும்போது, சிலர், பெஞ்சமினை ஏதேனும் ஒரு நூதன கதை சொல்லுமாறு வேண்ட, அவர், "கழுகும், பூனையும்" என்ற கதையைச் சொன்னார். இது அவரது கற்பனா சக்தியைக் காட்டுகிறது. அக்கதை:

"அதிக உயரத்தில் ஆகார நிமித்தம், ஒருநாள் ஒரு கழுகு வட்டமிட்டுக்கொண்டிருந்தது. அது திடீரென மகிழ்ச்சியுற்று, 'நல்ல வேளையாய் இதோ உளது ஒருமுயல்' என்று ஒன்றைக்கண்டு, அதன் மேல் ஓரேபாய்ச்சலாய்ப் பாய்ந்து, அதைத் தன் கால்களுக்கிடையிற் சேர்த்துக் கட்டித்தூக்கிச் சென்றது. நல்ல ஆகாரம் கிடைத்து விட்டதென மகிழ்ந்து உயரச்செல்லும் கழுகை, அதன் காலுக்கிடையில் அகப்பட்ட பிராணி, சிறிதுதூரம் சென்றதும் செல்லாததும், பிராண்டிக் கடித்து ஹிம்ஸைசெய்ய ஆரம்பிக்கவே, கழுகு திடுக்

கிட்டுத் திகைத்து அப்பிராணியை உற்று நோக்கியது. உடனே அதன் உள்ளம் பதறியது: ஏனெனில், தான் தூக்கிவந்தது 'முயல் அல்ல' வென்றும், அது ஒரு 'கொழுத்தபூனை' யென்றும் கண்டு கொண்டது. கழுகு பூனையைப்பார்த்துத் தன்னைக் கடிக்கவேண்டா மென்றும், தன்னை எவ்விதத்தும் தொந்தரவு செய்யாமல் விட்டுவிட்டால், அதைத் தானும் விட்டுவிடுவதாகவும், தெரிவித்துக்கொண்டது. பூனை, "நண்ப! நீ ஆகாயத்திலிருந்து என்னை விட்டுவிட்டால் நான் சாவது திண்ணம். ஆகையால் அதுகூடாது. என்னை இருந்த இடத்திற் கொண்டுபோய் விட்டுவிட்டால் உன்னை நானும் விட்டுவிடத்தடையில்லை' என்றது. கழுகும் அவ்வாறே பூனையைப் பூமியிற் சாவதானமாய்க் கொண்டுவந்து சேர்த்துவிட்டு விடுதலைப்பெற்றுத் 'தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்' என மகிழ்ந்து சென்றது". என்பதே.

கதையை முடித்தவுடன் எல்லோரும் நகைத்தனர். பெஞ்சமின் வெகு சாமார்த்தியமாய், இங்கிலாந்தாகிய கழுகு, அமெரிக்காவாகிய பூனையை, மதிமயக்கால், முயலாக நினைத்துப் பாய்ந்து சண்டைக்கு வருகிறதென்றும், கடைசியில் உண்மையாய் 'அது முயலன்று, பூனை' யென்றறிந்து விசனிக்க நேரிடுமென்றும், மறைபொருள்படக் கதையைக்கூறி முடித்தது எவ்வளவு சமார்த்தியம் பாருங்கள்!. இவரது தீர்க்கதரிசனம் நிறைவேறியதும் ஆச்சரியமன்றோ?

இவர் இங்கிலாந்திலிருந்து புறப்படுமுன் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போர் மூண்டுகொண்டது. ஜியார்ஜ் வாஷிங்டன் (George Washington) என்பவர் அமெரிக்கா சேனைகளின் அதிபதியாக நியமிக்கப் பெற்றார்.

யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கும்பொழுது அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்கள் யாவும் எவர் அதிகாரத்திற்கும் கீழ்ப்பட்டவைகளல்லவென்றும், சர்வ சுதந்திரமும் உரிமைகளும் வாய்ந்த நாடுகளென்றும் தீர்மானிக்கப்பட்டு விளம்பரப் படுத்தப்பட்டது. இத் தீர்மானம் நடக்க இருக்கும் சமயத்தில் பெஞ்சமின் இங்கிலாந்து வந்து சேரவே, அவரை வீரார் என்றும் போல உவகையுடன் வரவேற்று உபசரித்து, அத் தீர்மானத்தைத் தயாரிக்க நியமிக்கப்பட்ட ஐவரில் ஒருவராகத் தெரிந்தெடுத்தனர்.

அத்தியாயம் 11.

பெஞ்சமின் பாரிஸ் நகரம் செல்லல்.

எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்—திருவள்ளுவர்

ஆற்றுவா ராற்றல் பணிதல்; அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை—திருவள்ளுவர்

இப்படி யுத்தம் நடந்து கொண்டிருக்கையில், இங்கிலாந்தின் வலிமை சோர்வடைந்தது. இங்கிலாந்திலுள்ள அநேகருக்கு இப் போரில் விருப்பமில்லை. மேலும் யுத்தத்தை நடத்திய தளகர்த்தர்களும் மந்திரிகளும் வேலை தெரியாத சாமான்யர்கள். இன்னும் இங்கி லாந்தும் அமெரிக்காவும் வெகு தொலையில் இருப்பதால் இங் கிலாந்திலிருந்து ஆகாரம் யுத்த சாமான் முதலியன அனுப்புவது கஷ்டமானதாயிருந்தது. இடந் தெரியாத காடு அடர்ந்த நாட்டில் ஆங்கிலேயரால் அந்நாட்டிலேயே குடியேறி நாட்டை முற்றும் அறிந் திருந்த தம் சகோதாருடன் சண்டை இடுவது கஷ்ட சாத்தியமான தாயிருந்தது.

பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் அக்காலத்திற் கடும் பகை உண்டு. ஆதலின் இங்கிலாந்தை அடியோடு கவிழ்த்து விடத் தக்க சம யம் எதிர்பார்த்திருந்த பிரான்ஸ், (France) இச்சமயத்தைக் கை சோரவிடாமல், தாய் நாடோடு போர்புரியும் அமெரிக்கர்களுக்குத் தன்னாலான உதவியை ரகசியமாய்ப் புரியமுன் வந்தது.

பெஞ்சமினுக்கும் பிரான்ஸ் தேசத்துப் பிரபல கனவானொருவரி டமிருந்து ஒருநீண்ட கடிதம் வந்தது. அதில் அமெரிக்கர்களுக்கு, வேண்டிய பணம் வெடிமருந்து முதலியன ரகசியமாய்த் தருவதற்கு பிரான்ஸ் கவர்மெண்டாரே வலிந்து உதவத்தயாராக இருப்பதாகவும், யுத்த வீரர் பலர் அமெரிக்கர்வோடு கூடி இங்கிலாந்திற்கு விரோத மாய்ப் போர் புரியச் சித்தமாயிருக்கிறார்களென்றும் கண்டிருந்தது. இந்நற்செய்தியை அறிந்த அமெரிக்கருக் குண்டான சந்தோஷத் திற்கு அளவே இல்லை. உடனே அவர்கள் பிரான்ஸ் தேசத்திற்கு மூன்று பேரைத் தூது விடுக்கத் தீர்மானித்தார்கள். அதில் பெஞ்ச மினும் ஒருவர்,

இப்பொழுது அவருக்கு வயது எழுபதாக இருந்தும், அவர் தம் சௌகரியத்தைச் சற்றும் பொருள்படுத்தாது தேசபக்தியால் தூண்டப்பட்டு பிரான்ஸ்தேசம் போக முன்வந்தார். அது சுலபமான வேலையில்லை. வழியில் ஆங்கிலேயர் கையில் அகப்பட்டால் அவர்கள் அவரைக் கைதியாக்கி விடுவார்கள். எதற்கும் அஞ்சா நெஞ்சினராய் எடுத்த காரியத்தை இனிது நிறைவேற்ற வேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் தூண்டப்பட்டு ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற மற்றிருவருடனும் அவர் புறப்பட்டார்.

அவரது புகழ் ஏற்கனவே எங்கும் பரவி இருந்ததால் ரசாயன சாஸ்திர நிபுணர்களாலும், பாமர ஜனங்களாலும் பாரிஸ்நகரில் மிகுந்த வைபவத்துடன் வரவேற்கப்பட்டார். பெஞ்சமின் பிரான்ஸ் தேசத்து அரசராலும் அரசியாலும் உபசரிக்கப்பட்டார்.

இவர் இங்குவந்ததன் பயனாக பிரான்ஸிலிருந்து அமெரிக்காவிற்குப் பணமும் சண்டைபோட ஆட்களும் ஏராளமாய்க் கிடைத்தன. இந்த யுத்தத்தில் இங்கிலாந்து முற்றிலும் முறியடிக்கப்பட்டது. 1783-ஹு நடந்த உடன்படிக்கையால் அமெரிக்காவில் உள்ள ஐக்கிய மாகாணங்கள் சர்வ சுதந்திரமும் பெற்று தனி நாடாயின.

பிராங்க்லினுக்கு வயது 78 ஆய்விட்டது. அவர் படுத்த படுக்கையிற் கிடந்தார். சிநேகர்களுடனும் படுக்கையிலிருந்தே பேசி வந்தார். கடைசியில் நடக்கமுடியாமலிருந்தார். டோலியில் அவரைத் தூக்கிச்செல்லவேண்டி யிருந்தது. இங்கிலாந்துக்குக் கடைசி முறையாகச் சென்று, நண்பர்களைப் பார்த்துவிட்டு 1785ஹு பிலடல்பியா திரும்பினர்.

விமலாதேவி.

"புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டம், முற்காலத்தே, தன தான்யாதி சம்பத்துக்களுக்கு நிலைக்களமாயிருந்தது போலவே, கற்பிலும் வீரத்திலும் தீரத்திலும் ஞானத்திலும் மானத்திலும் தியாகத்திலும் தேசாபிமானத்திலும் அரசியலுணர்ச்சியிலும் சிறந்த ஸ்திரீ ரத்னங்களையுடைய தாய் அருமையும் பெருமையுமிக்க செயல்களுக்கு நிலைக்களமாயிருந்தது" என்பதை இனிது விளக்குவது, இச் சரித்திரசம்பந்தமான தமிழ் 'நாவல்' இது சாணக்கியசாகஸத்திலும் இனிமையிற் குறைவது. விலை 1—2—0.

ம. கோபாலகிருஷ்ணையர்,
No 2, ஆணிமுத்தம்மாள் ஸ்டோர்ஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

மாண்டவன் மீண்ட மாயம்.

நான்காவது அத்தியாயம்.

அதிசய ஒற்றுமை.

A Strange Coincidence.

காலையில் எழுந்தது முதல், இரவில் படுக்கை அறைசெல்லும் வரை, செய்யவேண்டிய ஒவ்வொரு காரியத்தையும் நாழிகைப்படி, தவறாது, கடியார யந்திரம்போல், ஒரே விதமாய், பிரதிதினமும் செய்யும் வழக்கத்தைக் கைலாஸம் கைக்கொண்டவனாயினும், முந்தியதினத்தில் தன் பழைய சிநேகன் ராமஸ்வாமியின் வரவால் அவ்வாறு செய்யக்கூடாமற் போயிற்று. இராமஸ்வாமி மங்களபுரம் கொலை சம்பந்தமான கட்டைப் படித்துக்கொண்டிருந்த இரவில், அவன் செய்தியறியாத கைலாஸம், அவனுடன் அன்றிரவில் நாடகம் பார்க்கத் தீர்மானித்து அவனையும் அழைத்தான். ஆயினும், ராமஸ்வாமி தனக்கு ஸௌகரியமில்லை என்று சொல்லியனுப்பினதால், அவன் தானும் நாடகத்திற்குப் போவதை நிறுத்திவிட்டான். அன்றிரவு அவன் சும்மாயிருக்கவில்லை. அக்காலத்தில் வெளிப்பட்ட புதிய தமிழ் நாவல் ஒன்றை வாசிக்கத் தொடங்கி, இராமுழுமையும் நித்திரையே யில்லாமல் அதையே படித்து முடித்தான். அந்த நாவலின் கதாவிசித்திரமும், முடிவும் தமிழ் நடையும் தமிழ்நாடு எங்கும் பெருமையாய்ப் புகழப்பட்டன. அது ஒரு மாயக்கதை (Mystery) யானதால், அதன் முடிவு காணக்கூடிய கடைசி அத்தியாயம் முடியும்வரை, அதைக் கீழேவைக்கத் தோன்றவில்லை. கடைசியாய்க் கதையும் முடிந்தது. குற்றவாளியும் அகப்பட்டான். "துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம்" என்ற அத்தியாயத்தோடு அது பூர்த்திஆயிற்று. பொழுதும்விடிந்தது. இராமுழுமையும் தூக்கமில்லாததாலும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையானதாலும் கைலாஸம் சற்று அயர்ந்து நித்திரை செய்தான். மணி 8 அடித்தும் அவன் எழுந்திருக்கவில்லை. இதற்குள் இரா முழுமையும் **மெய்க்கதை** வாசித்துத் தூக்கம் விழித்த ராமஸ்வாமி, **போய்க்கதை** வாசித்து இரவைக் கழித்த கைலாஸத்தை வந்து எழுப்பினன். உடனே திடீரென்று கைலாஸம் படுக்கை விட்டெழுந்து, "சீ! என்னடா! மணி எட்டு ஆயிற்று!" (ராமஸ்வாமியைப் பார்த்து)

ஏதப்பா! ராத்திரி நாடகத்திற்கு வருகிறேனென்று ஏமாற்றி விட்டாய்?" என்றான்.

ராம:—"நீ போய்ப் பார்த்தாயல்லவா எனக்கும் சேர்த்து? நன்றாய் இருந்ததா?"

கைலா:—"நான் நாடகம் பார்க்கப்போகவே இல்லை."

ராம:—"உன் முகத்தைப் பார்த்தால் இராமுழுமையும் தூக்கம் இல்லாதிருந்தவன்போல் இருக்கிறதே: முகம் வெளுத்திருக்கிறது. கண் சிவந்திருக்கிறது.—ஏதாவது பிரவிர்த்திகள்—பலமாய்—கொஞ்சம்—ஜாஸ்தியாய் உண்டோ?"

கைலா:—"உனக்கு எப்பொழுது பார்த்தாலும் அந்த எண்ணந்தானே? கண்ணாடி சுத்தமானாலும் அது பார்ப்பவன் முகத்தைத்தானே பிரதிபிம்பிக்கும். நீ 'ஆத்மவத் ஸர்வ பூதேஷு' என்றபடி, உன்னைப்போல என்னையும் நினைக்கிறாய்—யார்?—அவள் பெயர் என்ன?—பாலாம்பாள்! பாலாம்பாள்!! ஹ! ஹ!! ஹ!!!

ராம:—(தன்னை அறியாமல் கொஞ்சம் சிரித்துக்கொண்டு) "அப்படியானால், ஏன் இப்படி உன் முகம்—?"

கைலா:—"ஏன்? சம்பந்தத்தால் தான் என் தூக்கம் கெட்டுவிட்டது"

ராம:—"நான்தான் சொன்னேனே உன் பிரவிர்த்திக்கு ஏற்ற—"

கைலா:—"சம்பந்தம் என்ற மாத்திரத்தில் எங்கெங்கோ உன் புத்தி போய்விட்டது. 'சம்பந்தம்' என்பது ஒருவன் பெயர். 'திருடனுக்குத் தோன்றுமாம் திருட்டுப் புத்தி'—இந்தச் சம்பந்தம் ஒரு தமிழ் நாவல் எழுதியிருக்கிறான். அது 'ஏதோ நன்றாய் இருக்கிறதென்கிறார்களே' என்று கையில் எடுத்தேன். அதை முடிக்கும் வரை தூக்கமே வரவில்லை."

ராம:—"அப்படியானால் என்னைப்போல நீயும் தூங்காமல்—"

கைலா:—"ஓஹோ! நீயும் அந்தச் சனியன் பிடித்த **'விதியின் பயன்'** என்ற நாவலைத் தான் வாசித்தாயோ?"

ராம:—"இல்லை. நீ பொய்க் கதை வாசித்து இரவைக் கழித்துச் சந்தோஷமடைந்தாய். நான் மெய்க்கதை, அதிலும் கொடியகதை, ஒன்றை வாசித்து வருத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறேன்" என்று சொல்லிக் கையில் இருந்த கேஸ்க் கட்டை

மேஜை மேலே தொப்பென்று எறிந்து விட்டுக் கைலாசத்தின் படுக்கையிலேயே விசனத்துடன் சாய்ந்தான்.

கைலா:—"ஓஹோ! சிதம்பரமிடம் சென்றதற்குக் கெட்ட ஸமாசாரம் தானோ?"

ராம:—"ச்ஸ்! இந்தக் கட்டைப் பார். இதைத்தான் இரா முழுமையும் வாசித்துக்கொண் டிருந்தேன்."

கைலா:—"அவ்வளவு— ஏதாவது —கெடுதலாக—,சரி!—பாலாம்பாள் யார்?—ஏதாவது தெரியுமா?"

ராம:—"பூர்வ ஸ்திதிக்குக் குறைவில்லை. அவளைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. என் பெற்றோர்கள்தான்—"

கைலா:—"உன் பெற்றோர்கள்!—என்ன? ஒருவேளை உயிரோடு இருக்கிறார்களோ?"

ராம:—"இல்லை.—அவர்கள் இறந்தது வாஸ்தவம்தான்.—"

கைலா:—"ச்ஸ்!— பின்னே என்ன இந்த பாலாம்பாளும் சிதம்பரமும் உனக்குச் சொல்லவேண்டியிருக்கிறது?"

ராம:—"ஐயோ! அது மாத்திரம் அல்லவே—என் தகப்பனர் கொலை செய்யப்பட்டு இறந்தாராம்—"

கைலா:—" கொலையா!"

ராம:—"ஆமாம். அது மாத்திரமா? என் தாயார்மீதே கொலைக்கேஸ் வந்ததாம் என் தகப்பனரைக் கொன்றதாக. பார்த்தாயா அதிசயத்தை?"

இராமுழுமையும் கொலைக்கதையை வாசித்துக்கொண்டிருந்த கைலாஸம், தன்சிநேகன் உண்மையில் நடந்த கொலைஸமாசாரம் சொல்லவே, திடுக்கிட்டுச் சற்றுத் தியங்கி மறுபடி மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு, தன் சிநேகனையும் தைரியப்படுத்த எண்ணி "ராமஸ்வாமி! எல்லாம் பிறகு பேசிக்கொள்வோம்; கொஞ்சம் காபி சாப்பிடுவோம் வா." என்றான்.

ராம:—"காபியா? கைலாசம்! நான் என்னஸமாசாரம் சொல்லுகிறேன்? கொஞ்சங்கூட மனதில் வருத்தமில்லாமல் காபி சாப்பிட அழைக்கிறாயே?"

கைலா:—"எனக்கு வருத்தமில்லாமலில்லை. இந்தக்கொடிய ஸமாசாரத்தால் உன் மனம் நொந்திருக்கிறது. மனதைப் பதற விடாதே. நீ ஒன்றும் சாப்பிடவில்லைபோல் இருக்கிறது. நிதானித்து யோசித்து, வேண்டிய ஏற்பாடு செய்வோம்",

இருவரும் 'காபி' சாப்பிட்டுவந்து உட்கார்ந்தார்கள்.

கைலா:—"நடந்த ஸமாசாரத்தை விவரமாய்ச்சொல்."

ராம:—(வருத்தத்துடன்), "என்ன சொல்லுகிறது? இந்தக்கட்டைப் பார்த்துக்கொள். எனக்கு என்னவோபோல் இருக்கிறது".

கைலா:—அதைப்பார்ப்பானேன்? பார்த்தால் அதிக நாழிகையாகும். இப்பொழுது சொல் நான் கேட்கிற கேள்விகளுக்குப்பதில். உன் தகப்பனார் கொலை செய்யப்பட்டார். இருக்கட்டும்; கொலை செய்தவன்?"

ராம:—"ஈசுவரனுக்குத்தான் தெரியும்."

கைலா:—"வருஷம் இருபது ஆயிற்று. இனிமேல்எங்கே—?"

ராம:— "அப்படியா?" (கோபாவேசத்துடன் மேஜையை ஓங்கி அடித்து), "கொன்றவனை எப்படியாவது கண்டுபிடித்துப் பழிக்குப் பழி வாங்காமலா?"

கைலா:—(அவன் கோபத்தைக் கவனியாதவன்போல்) "உன் தாயார்மேல் கேஸ் வந்தது என்றாயே—"

ராம:—"ஆமாம். விடுதலையாயிற்று. அவள் இறந்தும்போனாள். அவளுக்கு வந்த அவமானமும் அவளோடு ஒழிந்தது. இவ்வளவாவது போனாளே, இருந்து கஷ்டப்படாமல். ஆனால் கொலை செய்தவனை விடப்போகிறதில்லை. என் தாயாருக்கு இவ்வளவு அபகீர்த்தி உண்டுபண்ணினவனை—"

கைலா:—"ராமஸ்வாமி! ஆத்திரம்வேண்டாம். நான் நாவல் வாசித்து முடித்ததும், அதேமாதிரி உன் கேஸ் வந்ததும் ஆச்சரியமாய் இருக்கிறது. இருக்கட்டும். உன் தகப்பனாரைக் கொன்றவனைக் கண்டு பிடிக்கும் விஷயத்தில் நான் வேண்டிய உதவி செய்கிறேன். ஆனால், உன் தாயார்—"

ராம:—"அவளை ஜூரிகள் 'குற்றவாளி அல்லள்' என்று விட்டார்களாம். இன்னும் என் அவள்மேல்—"

கைலா:—"இந்த நிலைமையில் அவள்மேல் நான் ஒன்றும் சொல்லத் துணியவில்லை. நடந்ததை விவரமாய்ச்சொல். பிறகு ஒரு விதமாய் யோசிப்போம்."

ராமஸ்வாமி பூர்வவிர்த்தாந்தம் முழுமையும் தனக்குத்தெரிந்தவரை விவரமாய்ச் சொல்லி முடித்தான். கைலாஸம் முகம் ஆச்சரியத்தால் 'பளிச்' என்று மலர்ந்தது. கதை முடியவே, திடீரென்று எழுந்துபோய், 'பீரோ'விலிருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்து வந்து,

"இதுதான் 'விதியின் பயன்'. இந்த 'நாவலை' நீ வாசித்திருக்கிறாய் போலிருக்கிறது.

ராம:—"தீயை வை. நான் உண்மையாய் நடந்த விஷயம் சொல்ல, நீ 'நாவல் வாசித்தாயா? என்கிறாயே? உன் புத்தி என்னபுத்தி?

கைலா:—(ராமஸ்வாமி தோளைத்தட்டி) "அப்பா! கோபியாதே. நான் சொல்லுவதைச் சற்றுக் கவனித்துக்கேள்".

ராம:—"என்ன?"

கைலா:—"நீ சொல்லும் செய்தி ஆச்சரியமாய் இருக்கிறது. நான் வாசித்ததோ அதைப் பார்க்க ஆச்சரியம். சரி! இந்தக் கொலை, மங்களபுரத்தில் இருபது வருஷத்திற்குமுன்—அதாவது 1885-ல் நடந்தது.

ராம:—"ஆமாம். அப்படித்தான் அந்தக் காலப் பத்திரிகைகள் மூலமாய்த் தெரிகின்றது".

கைலா:—"அது பழங்கதையாய் மறந்தும் போயிற்று."

ராம:—"ஆமாம். இப்பொழுது யார் அதனைச் சொல்லுகிறார்கள்?"

கைலா:—"அதுதானே விசேஷம்."

ராம:—"என்ன விசேஷம்?."

கைலா:—"நீ இப்பொழுது சொன்னது எனக்கு இராத்திரியே தெரியும்."

ராம:—(ஆச்சரியத்துடன்) "என்ன பிதற்றுகிறாய்? அது எப்படி முடியும்? நானே நேற்று இராத்திரிதானே கேள்விப்பட்டேன்."

கைலா:—"சரிதான். நானும் நேற்று இராத்திரி தான் அதை வாசித்தேன்."

ராம:—(சந்தேகத்துடன்) "நேற்று இராத்திரி வாசித்தாயா?'

கைலா:—"ஆமாம். இந்தப் புஸ்தகத்தில் தான்."

ராம:—"நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லை!"

கைலா—"நான் சொல்லுகிறதா? இந்த "மங்களபுரம் கொலை"யையே ஓர் நாவலாக, சம்பந்தம் என்பவன் எழுதியிருக்கிறான். மறந்துபோன உன் குடும்பப் பழங்கதை இப்பொழுது தமிழ் நாடெல்லாம் 'டாம், டாம்' அடித்துக் கிடக்கிறது."

R. S. நாராயணசாமி ஐயர்., B.A. B.L.

*வானம்பாடிக் கும்மி.

[இது P. B. Shelley என்ற ஆங்கிலப்புலவர் பாடிய "To A Sky-lark" என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு.]

வாழி! உல் லாசமாய் வாழ்அச ரீரியே!
வானகத் தோ, அங்க ருகிருந்தோ,
தாழ்வில் இ தயத்துத் தானேள ழும்இசை
தன்னை உ குக்கும் நீ புள்அல வே. (1)

நாடிமென் மேல்புவி நின்றுபாய் வைதீபோல்
நன்னீல வான்கடல் மீதெழுவை.
பாடிக்கொண் டேஉய ரப்பறப் பையென்றும்
பறந்து கொண்டேநீ பாடிடு வை. (2)

சுந்தர மாய்ஒளிர் மேகம்ம றைக்கும் ஆழ்
சூரியன் பொன்னொளி வீசுகையில்
பந்தம்அ றவெளிப் பட்டிடும் ஆநந்த
படிவம் எ னமிதந் தோடிடுவை. (3)

வட்டம்இ டும்இடம் சுற்றிய மங்கு செம்
மாலைப்பொ ழுதுரு கிமறை யும்.
பட்டப்ப கல்மறை விண் உறை மீன் எனப்
பார்வைக்குத் தோற்றிலை நீ எனி னும், (4)

தெள்ளிய வெள்உத யத்தில் தன் மிக்கொளி
தேய்ந்தும் தான் அங்குள்ள தேஎன யாம்
உள்ளத்து ணரும்அவ் வெள்ளியின் கூர்கதிர்
ஒத்தநின் கூர்களி கேட்டிடு வேன். (5)

மாசில்இ ரவில் ஓர் மேகத்தி டைநின்று
மாமதி தண்கதிர் வானம்எ லாம்
வீசநி றைவது போலவே சூழ்கிடும்
விண்ணகம் மண்ணகம் நின்இசை யால். (6)

இன்னது நீஎன யாம்அறி யேம். உனக்
கேதுச மானமிகுதியும்! உன்
வன்னமு கத்தொளிர் இன்னிசை மாரிபோல்
வானவில் மேகமும் பெய்திலதே. (7)

---

* இது இவ் வருஷத்திய B.A., மாணவரின் உபயோகத்திற்காக எமது அரும்பொருட்டிரட்டினின்று எடுத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

"TO A SKYLARK"

(1) Hail to thee, blithe spirit!
Bird thou never wert,
That from heaven or near it,
Pourest thy full heart
In profuse strains of unpremeditated art.

(2) Higher still and higher
From the earth thou springest,
Like a cloud of fire;
The blue deep thou wingest,
And singing still dost soar, and soaring ever singest.

(3) In the golden lightning
Of the sunken sun,
O'er which clouds are bright'ning,
Thou dost float and run,
Like an unbodied joy whose race is just begun.

(4) The pale purple even
Melts around thy flight;
Like a star of heaven,
In the bread dayligt
Thou art unseen, but yet I hear thy shrill delight:

(5) Keen as are the arrows
Of that silver sphere,
Whose intense lamp narrows
In the white dawn clear,
Until we hardly see, we feel that it is there.

(6) All the earth and air
With thy voice is loud,
As, when night is bare,
From one lonely cloud
The moon rains out her beams, and heaven is overflow'd.

(7) What thou art we know not;
What is most like thee?
From rainbow clouds there flow not
Drops so bright to see
As from thy presence showers a rain of melody.

கொள்ளாத நம்பிக்கை அச்சம் இவைபுவி
கொள்ளுமட் டும்பிறர் தூண்டாதே
எள்ளாத தெள்ளிசை பாடிடும் தன் ஒளிர்
எண்ணத்தில் ஆழ்கவி வாணன்கொ லோ! (8)

தன்னது றையுள்நி ரம்பந டுநிசி
தன்னந்த னியாத்தன் வேட்கை யென
மன்னிய கீதத்தால் காதல்த ணித்திடும்
மாடத்(து) உயர்குலக் கன்னிகை யோ! (9)

தனைமறைத் திடுகின்ற புல்லி னும் பூவினும்
தானாக வேமின்ஒ ளிபரப் பும்
பனிநிரம் பும்பள்ளத் தாக்கில்உ றைகின்ற
பைம்பொன்நி றமின்மி னிதா னே! (10)

மூடிடும் பச்சிலைக் குள்ளிருந் துவெய்ய
மூசிளங் காற்றால்இ தழ்விரித் து
நாடிடும் சோரஅத் தென்றலும் சோர்ந்திட
நன்மணம் வீசிடும் ரோஜா வோ! (11)

மின்னிடும் புல்லதன் மேல்வசந் தத்துளி
வீழ்ஒலி யினுமழைப் பூவினுமே
இன்பசுத் தநவ மாய்உள யாவினும்
இயைந்து மேல்எழும் நின் இசை யே. (12)

அசரீரி யே!புள்ளே! நின்இன்பச் சிந்தனை
ஆனதென்! கள்உண்போன் கள்துதி யில்
திசைதொறும் காதலன் காதற்பாட் டில் உன்றன்
திவ்யக்க ளியெழக் கேட்டிலே னே. (13)

கல்யாண வாழ்த்தைஜ யஇசை யை உன்றன்
கானத்தோ டொப்பிட்டுக் கூறல் எலாம்
இல்லாப்பெ ருமையே ஆகும்: இவைகளில்
ஏதோகு றைஉள தென்றுணர் வோம். (14)

(8) Like a poet hidden
In the light of thought,
Singing hymns unbidden,
Till the world is wrought
To sympathy with hopes and fears it heeded not:

(9) Like a high-born maiden
In a palace tower,
Soothing her love-laden soul
In secret hour
With music sweet as love, which overflows her bower:

(10) Like a glow-worm golden
In a dell of dew,
Scattering unbeholden
Its aerial hue
Among the flowers and grass, which screen it from the view

(11) Like a rose embower'd
In its own green leaves
By warm winds deflower'd,
Till the scent it gives
Makes faint with too much sweet these heavy-winged
[thieves.

(12) Sound of vernal showers
On the twinkling grass,
Rain-awaken'd flowers,
All that ever was
Joyous, and clear, and fresh, thy music doth surpass.

(13) Teach us, sprite or bird,
What sweet thoughts are thine:
I have never heard
Praise of love or wine
That panted forth a flood of rapture so divine,

(14) Chorus hymeneal
Or triumphal chaunt,
Match'd with thine, would be all
But an empty vaunt—
A thing wherein we feel there is some hidden want.

எப்பொருள் மூலம்நின் இன்பக்க ளிப்பினுக்
கெந்நிலம்! எக்கடல்! எம்மலை! விண்?
எப்புலம் ? நின்இனத் தெத்தகை நேயம்! மற்
றெவ்வகைத் துன்பறி யாததுவே! (15)

சுத்தநின் கூர்இன்னி சைஎழுப் பஎன்றும்
சோர்வறும்; சோகமே கிட்டாது.
சித்தத்தில் அன்புளை! நின்உளம் நைதரத்
தெவிட்டும் நேயம்அ றிந்திலதே. (16)

மாய் எம்பி னும்தூங்கி யோவிழித் தோமிக
வாய்ந்தனை சாவுண்மை; அன்று பின்,
நீஎவ்வி தம்இன்னி சைஅரு விப்புனல்
நின்மல மாகநி ரப்பிடு வை! (17)

இறப்பெதிர் வெண்ணிக்க லங்கிஇல் தாததற்
கேங்குவம்; நம்முள்ள மும்மகிழ் வும்
பெறத்தகும் துன்பக்க லப்பு: ந மக்கின்பப்
பேறிசை சோகர ஸப்பாட் டே. (18)

அச்சம்,-அ கந்தை, அ ருவைஅ கற்றினும்
அன்றியும் கண்ணீர்உ குத்திட யாம்
இச்சகம் தோன்றிலம் ஆயினும் நின் மகிழ்
வெப்படி எட்டுவம் என்றறி யேன். (19)

இன்பம்வி ளைக்கிடும் இன்னிசை யாவினும்,
எட்டிற்பு தைபொருள் யாவினும், நின்
றன்பெரும் சாமர்த்தி யஇசை மேலெனத்
தாம்கொள்வர் பாவலர் மண்இகழ் வோய்! (20)

உன் உளம் ஒரும்உ வகையி னிற்பாதி
ஓதுவை யேல்என்இதழ்நின்றெ ழும்
இன்னிசைப் போதைசெ வியுறும் இவ்வுல
கின்னே யான் நின்இசை கேட்டிடல் போல். (21)

ம. கோபாலகிருஷ்ணன்

(15) What objects are the fountains
Of thy happy strain
What fields, or waves mountains?
What shapes of sky or plain?
What love of thine own kind? what ingnornce of pain?

(16) With they clear keen joyance
Langour cannot be:
Shadow of annoyace
Never came near thee:
Thou lovest, but ne'er knew love's sad satiety.

(17) Waking or asleep,
Thou of death must deem
Things more true and deep
Than we mortals dream,
Or how could thy notes flow in such a crystal stream?

(18) We look before and after,
We pine for what is not:
Our sincerest laughter
With some pain is fraught;
Our sweetest songs are those that tell of saddest thought

(19) Yet if we could scorn
Hate, and pride, and fear;
If we were things born
Not to shed a tear,
I know not how thy joy we ever should come near.

(20) Better than all measures
Of delightful sound,
Better than all treasures
That in books are found,
Thy skill to poet were, thou scorner of the ground!

(21) Teach me half the gladness
That thy brain must know,
Such harmonious madness
From my lips would flow,
The world should listen then, as I am listening now.

P. B. SHELLEY.

தனிமை யிரக்கம்.

குயிலனாய்! நின்னொடு குலவியின் கலவி
பயில்வதிற் கழித்த பன்னாள் நினைந்துபின்
இன்றெனக் கிடையே எண்ணில் யோசனைப்படும்
குன்றமும் வனமும் கொழிதிரைப் புனலும்
மேவிடப் புரிந்த விதியையும் நினைந்தால்
பாவியேன் நெஞ்சம் பகீரெனல் அரிதோ?
கலங்கரை விளக்கொரு காவதம் கோடியா
மலங்குமோர் சிறிய மரக்கலம் போன்றேன்
முடம்படு தினங்காள்! முன்னர்யான் அவளுடன்
உடம்பொடும் உயிரென உற்றுவாழ் நாட்களில்
வளியெனப் பறந்தநீர் மற்றியான் எனாது
கிளியினைப் பிரிந்துழிக் கிரியெனக் கிடக்கும்
செயலையென் இயம்புவல் சிவனே
மயலையிற் றென்றெவர் வகுப்பரங் கவட்கே. —ஸி. சுப்பிரமணியபாரதி.

Tender-Handed Stroke A Nettle

TENDER-HANDED stroke a nettle,
And it stings you for your pains ;
Grasp it like a man of mettle,
And it soft as silk remains.

'Tis the same with common natures,
Use them kindly, they rebel ;
But be rough as nutmeg-graters,
And the rogues obey you well. —AARON HILL.

கயவர் இயல்.

மெல்லிய கையால் மெதுவாகக் காஞ்சொறியைப்
புல்லின் கடுகடுப்பே பூணுமால்—வல்ல
மதியூகி போல்இறுக. மற்றதனைப் பற்றின்
அதுபட்டே போல்மிருது ஆம்.

வன்பாரில் வாழ்கின்ற மக்கள் இயல்இதுவே:
அன்பா நடத்தின் அவர்கலகம்—மன்புரிவர்.
பாக்குவெட்டி போல்நெருக்கிப் பற்றிடிற்றான் இத்தகைய்
போக்கிரிகள் கீழ்ப்படிவர் போந்து —ம. கோபாலகிருஷ்ணன்.